செ.வெ.எண் : 32/ஏப்ரல் நாள்:28.04.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சீர்மரபினர் நல வாரியம், நரிக்குறவர் நல வாரியம், உலமாக்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு கொரோனா சிறப்பு உதவித் தொகை ரூ.1000/- வழங்கப்படுகிறது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் வசிக்கும் சீர்மரபினர் நல வாரியம், நரிக்குறவர் நல வாரியம், உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு பெற்று அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு கொரோனா சிறப்பு உதவித் தொகையாக ரூ.1000/- வழங்கப்பபடுகிறது. இந்த நிவாரணத் தொகை பெறுவதற்கு தகுதியான நபர்கள், 1. நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை நகல், 2. ஆதார் அட்டை நகல், 3. உறுப்பினர் பெயரில் உள்ள வங்கி கணக்கு புத்தக நகல். 4. உறுப்பினரின் அலைபேசி எண் ஆகிய விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே நல வாரிய உறுப்பினர்கள் அனைவரும் சமூக விலகலை கடைபிடித்தும் (Social Distancing) சீர்மரபினர், நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள்அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம் மேற்குறிப்பிட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கவும், உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரிய உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் நகல்களை அந்தந்த கிராம பள்ளி வாசல் ஜமாத் தலைவர்களிடம் 30.04.2020ம் தேதிக்குள் சமர்ப்பித்து சிறப்பு உதவித் தொகையினை நலவாரிய உறுப்பினர்களின் வங்கிகளின் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் விவரத்தினை dbcwo.tnrmd@nic.in என்ற மின்னஞ்சல் முகவரியிலும் சமர்ப்பிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**